திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இஸ்லாமிய கலாச்சாரம் என்பது ஏனைய கலாச்சாரத்திற்குச் சிறிது மாறுபட்டது. அதுவும் இந்தத் துறையில் இணைக்கப்படுமா ? அல்லது அதற்கு வேறு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எந்த கலாச்சாரமானாலும், அதனுடைய தனித் தன்மையைப் பாதுகாக்கிற முறையிலே ஒரு கலாச்சாரத் துறை அமைக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தமிழ் நாட்டினுடைய, தமிழர் பண்பாடு, கலாச்சாரம், உலக கலாச்சாரங்களிலே முதன்மையான ஒன்று. இதை உலக மக்களும் அறிகிற நிலையில், நம்முடைய சமயங்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவைகளையெல்லாம் உலக மக்களுக்கும், நம்முடைய தமிழ் மக்களுக்கும் தெரிவிக்கிற சூழ்நிலையில் கலாச்சாரத்திற்கென்று தனித் துறையை விரைவில் அமைத்து, இந்தத் துறையில் மற்ற துறையை இணைக்காமல் தனித் துறையாகச் செயல்பட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான், இதற்கு ஒரு முக்கியத்துவம் தர வேண்டுமென்ற அடிப்படையைக் கருத்திலே கொண்டுதான் இந்த கருத்து இப்போது அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்விகள் 52, 53 ஒத்திப்போடப்படுகின்றன.

Technical Teacher's Course in Tailoring.

* 54 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Technical Teachers' Course in Tailoring is not conducted by the Government: and

(*b*) if so, the reasons therefor ?

தையல் தொழிலில் தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தையற் தொழிலில் தொழில் நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி அரசால் நடத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) தற்போதுள்ள மாற்றப்பட்டுள்ள புதிய பாடத் திட்டத்தின்படி தமிழ் நாட்டிலுள்ள இடைநிலைப் பள்ளிகளில் தையல் பாடம், ஒரு துணைக் கைத்தொழிலாக மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிறது. துணைக் கைத்தொழில்கள் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியருக்கு தொழில் நுட்ப ஆசிரியர் தகுதிச் சான்றிதழ் தேவையில்லை. ஆதலால் தையல் பாடத்திற்காக அரசு தொழில் நுட்ப ஆசிரியருக்கான தகுதிச்சான்றிதழ் வகுப்பை நடத்துவதில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தத் தையல் தொழில் ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி இல்லாத காரணத்தால், அவர்கள் ஊதியம் பெறுவதற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று ஆணை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு முழு ஊதியமும் வழங்கப்படுவதில்லை. எனவே இந்தச் சிறப்புப் பயிற்சி தேவையில்லையென்றால், தற்போது பணியிலுள்ள தையல் தொழில் ஆசிரியர் களுக்கு ஊதியம் வழங்குவதிலே உள்ள தடையை நீக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தையல் தொழிலுக்கு டி.டி.சி. பயிற்சி தேவை யில்லையென்று அரசே சொல்லியிருக்கிறது. அப்படி பயிற்சி தேவையில்லை யென்று சொன்னதற்குப் பின்னாலே, அந்த ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர் களாக ஏற்க தடை விதித்தது சரியல்ல. பயிற்சி அளிக்காதது அரசினுடைய குறையே தவிர, ஆசிரியர்களுடைய தவறு அல்ல. ஆகவே, அந்த ஆசிரியர் களையும் முழு நேர கைத்தொழில் ஆசிரியர்களாக ஏற்றுக்கொண்டு, ஊதியம் அளிக்க அரசு முன்வருமா? மேலும் அந்த ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப் பள்ளியிலே பணியாற்றினால், சம்பளம் ரூபாய் 210-ம், நடுநிலை தனியார் பள்ளி களில் பணியாற்றினால் ரூபாய் 150-ம், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி யாற்றினால் ரூபாய் 140-ம் வழங்கப்படுகிறது. இந்த வேறுபாடும் களையப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சம்பளத்தைப் பொறுத்தவரையில், ஊதிய நிர்ணயக் குழுவின் அறிக்கை வந்ததற்குப் பிறகு, பேசிக் கொள்ளலாம். ஆனால், தொழில் நுட்ப ஆசிரியராகத் தகுதிச் சான்றிதழ் தேவையில்லை என்று சொன்னதற்குக் காரணம், தையல் தொழில் துணைத் தொழில் பாடமாகப்

போதிக்கப்படுகிறது என்பதுதான். இது அரசு செய்த தவறு அல்ல. இது போல வேறு சில பாடங்களையும் துணைத் தொழில் பாடங்களாகப் போதிக்கிறோம். மின்சார ஒயர்மேன் வேலை, களிமண்ணால் பொம்மை செய்தல், கயறு திரித்தல், பாய் முடைதல் போன்றவை இப்படி துணைத் தொழிலாகப் போதிக்கப்பட்டு வருகின்றன. இப்படி ஒரே முறையைப் பின்பற்றி வருகிறோம். சம்பளத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தையல் ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் பயிற்சி தேவையில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். அரசு ஆணையும் அதைச் சொல்லுகிறது. இருப்பினும் சில இடங்களில், குறிப்பாக அருப்புக்கோட்டையில், தையல் ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சி இல்லையென்ற காரணத்தைக் காட்டி, அவர்களுக்கு ரன்னிங் ஸ்கேலில் சம்பளத்தை ஃபிக்ஸ் பண்ணமல், லம்ப்சம்மாக ரூபாய் 140, ரூபாய் 150 என்று கொடுக்கிறார்கள். அதைப்பற்றி ஐந்து பேர் அரசுக்குத் தனித் தனியாகவும், தையல் தொழில் ஆசிரியர்களுடைய சங்கத்தின் வழியாகவும் முறையீடு செய்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து, அவர்களையும் ரன்னிங் ஸ்கேலில் ஃபிக்ஸ் பண்ண அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சம்பளத்தைப் பொறுத்தமட்டில், ஊதிய நிர்ணயக் குழு அறிக்கைக்குப் பிறகு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

Teaching Staff in Aided Colleges.

* 55 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have fixed any ceiling for the total number of teaching staff for each cadre for aided colleges;

(*b*) if so, whether on account of this ceiling, some of them have to be reverted and some retrenched; and

(*c*) if so, the number of such cases cader-wise, affected in the aided colleges in Madurai and Ramanathapuram districts?